# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 30.06.2020**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

## பொருள் எண். 1

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1145** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 2

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜுன் 2020 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1146** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண். 3

இந்நகராட்சியில் ஜுன் 2020ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1147** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.4

இந்நகராட்சி சொந்தமான ஈப்பு வாகனம் பதிவு எண்.TN 20 AJ 7480 என்ற வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், மேற்கண்ட வாகனத்தினை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / தயாரிப்பு நிறுவனங்கள் மூலம் பழுதுகளை சீர் செய்து கொள்ள அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ.1.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி ஈப்பு வாகன பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரிடம் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1148** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.5

திருவேற்காடு நகராட்சி சுமார் 28.50 சதுர கி.மீ பரப்புளவும், 1004 தெருக்களின் எண்ணிக்கையும், 159.37 கி.மீ நீளம் நகராட்சி சாலைகளையும், 19.50 கி.மீ நீளம் தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையும் கொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 62289, 18 வார்டுகளை உள்ளடக்கியது. இந்நகராட்சியின் மொத்தம் 7142 எண்ணிக்கைகள் தெருமின் விளக்குகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து, இந்நகராட்சியில் தெருமின் விளக்குகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், தனியார் நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 04.07.2019ல் தெருமின் விளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு ஓர்ஆண்டு காலத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது.

தற்போது மேற்கண்ட நிறுவனத்தின் பராமரிப்புக்கான பணி காலம் 30.06.2020வுடன் முடிவடையும் தருவாயில் உள்ளது. எனவே, 2020–21ம் ஆண்டிற்கான தெருமின் விளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது பரவி வரும் கொரோனா (Covid-19) தொற்று வேகமாக பரவி நிலையில் உள்ளதாலம், தற்போது 144 ஊரடங்கு உத்திரவு காலம் பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருவதாலும், அனுமதி பெற காலதாமதம் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி, மேற்கண்ட அனுமதி பெறப்படும் காலம் வரையில் தெருமின் விளக்குகளை பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தற்போது பணி மேற்கொண்டு வரும் M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் மூலமே அதே விலைவிகிதத்தின் அடிப்படையிலேயே பணியினை மேற்கொள்ள 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதியும், தற்போது பரவி வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கான காலங்கள் கருதியும், தற்போது பணி மேற்கொண்டு வரும் M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாருக்கு 3 மாதத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1149** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ, இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.6

திருவேற்காடு நகராட்சி சொந்தமான ஈப்பு வாகன பதிவு எண்.TN 20 AJ 7480 என்ற வாகனத்தில் பழுதுதடைந்து வாகனத்தினை இயக்க முடியாமல் உள்ளதால், மேற்கண்ட வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர்செய்ய 18.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன பதிவு எண்.TN 20 AJ 7480 வாகனத்தில் பழுதுகளை சரி செய்தல். | 1.70 | M/s.Sakthi Body Works, No.46, Poonamallee Bye-Pass Road, (Opp MTC Bus Depot.) Poonamallee, Chennai-56 | குறைவு<br>அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | M/s.A.R.V Body Builders,<br>No.97, Tank Street,<br>(Behind Sundaram Motors),<br>Poonamallee, Chennai-56. | |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s.Sakthi Body Works,** நிறுவனத்தாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்

ஆ) மேற்கண்ட ஈப்பு வாகன பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1150 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.7

இந்நகராட்சியில் பொது நிதி 2020–21ன் கீழ் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் BOV வாகனத்தில் உள்ள பேட்டரிகளை புதியதாக மாற்றியமைக்க 18.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான BOV வாகனத்திற்கு Lithium Battery சப்ளை செய்து பொருத்துதல்.<br>(13 எண்ணிக்கை) | 6.50 | 1.M/s.CY Group of Company<br><br>2.M/s.Subha Metal Industries | 0.29 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.CY Group of Company நிறுவனத்தார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1151 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள கீழ்அயனம்பாக்கம் மாந்தோப்பு சாலை பழுதுதடைந்துள்ளதால் வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் போக்குவரத்து இடையூறாகவும் உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி மேற்கண்ட சாலைக்கு தார்தளம் புதுப்பிக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு பொது நிதி 2020–21–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1152 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.9</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள கீழ்அயனம்பாக்கம் மாந்தோப்பு குறுக்கு சாலை பழுதுதடைந்துள்ளதால் வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் போக்குவரத்து இடையூறாகவும் உள்ளதால், பொது மக்களின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி மேற்கண்ட சாலைக்கு தார்தளம் புதுப்பிக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு பொது நிதி 2020–21–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1153 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.10</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8ல் உள்ள நூம்பல் பிரதான சாலை பகுதியில் கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்வதால் RCC பைப் மிகவும் பழுதுதடைந்து வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் போக்குவரத்து இடையூறாகவும் உள்ளதால், பொது மக்களின் அவசியத்தினை கருதி, சிமெண்ட் தளம் கொண்டு பழுது பார்க்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு பொது நிதி 2020–21–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1154 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.11</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள புவனா தோட்ட சாலை பகுதியில் சாலைகள் பழுதுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கும் நிலையில் உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டினை அவசியம் கருதி மேற்படி சாலையினை தார்தளமாக புதுப்பிக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.10 இலட்சத்திற்கு பொது நிதி 2020–21–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1155 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.12</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல் உள்ள கோலடி லட்சுமி நகர் பிரதான சாலை பகுதியில் சாலைகள் பழுதுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால், மழைக்காலங்களில் மழைநீர் தேங்கும் நிலையில் உள்ளது. எனவே, பொது மக்களின் பயன்பாட்டினை அவசியம் கருதி மேற்படி சாலையினை தார்தளமாக புதுப்பிக்க அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.10 இலட்சத்திற்கு பொது நிதி 2020–21–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1156 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.13</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17ல் உள்ள சுந்தரசோழபுரம் பிரதான சாலையில் கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்வதால் சாலை மிகவும் பழுதுதடைந்து வாகன ஓட்டிகளுக்கும் மற்றும் போக்குவரத்து இடையூறாகவும் உள்ளது. எனவே, பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் பயன்பாட்டின் அவசியத்தினை கருதி, மேற்கண்ட சாலைக்கு தார்தளம் அமைத்திட அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.40 இலட்சத்திற்கு பொது நிதி 2020–21–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றத்தின் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1157** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.14</u>**

இந்நகராட்சியில் பொது நிதி 2020–21ன் கீழ் இந்நகராட்சி அலுவலகத்திற்கு பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான கணினி உபகரணங்கள் புதியதாக வாங்கி பயன்படுத்திக்கொள்ள 19.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சியில் அலுவலகத்தில் பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான கணினிகள், பிரிண்டர்கள், ஒளிநகல் இயந்திரம் பெரியது (Xerox Machine Big), மடிக்கணி (Laptop) மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் Amplifier Set சப்ளை செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல். | 7.00 | 1.M/s.Thukkaram Computers<br>2.M/s.Kanish System | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.37 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Thukkaram Computers நிறுவனத்தார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1158** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.15</u>**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட அடிப்படை வசதி பணிகளை மேற்கொள்ள 10.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விபரங்கள் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | |
|---|---|---|---|---|
| 1. | சக்திவேல் நகர் பகுதியில் உள்ள குறுக்கு தெருக்களுக்கு மூடுபலகைகள் அமைத்தல். | 3.00 | M/s.RR பில்டர்ஸ்<br><br>M/s.வனஜா கன்ஸ்ட்ரக்ஸன் | 1.51 % மதிப்பீட்டை விட குறைவு<br>3.22 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | சக்திவேல் நகர் பிரதான சாலை, 1வது பிரதான சாலை, 2வது பிரதான சாலை, 3வது பிரதான சாலை, 4வது பிரதான சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு மூடுபலகைகள் அமைத்தல். | 9.20 | M./s.ஆரோக்கியநாதன் கண்ஸ்ட்ரக்ஸன்<br><br>M/s.KB கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.36 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | சூரியநாராயணன் நகர் பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 6.50 | P.ரகு<br><br>J.இளங்கோ | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.04 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | கோலடி லட்சுமி நகர் 3வது தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 3.40 | S.நித்தியானந்தம்<br><br>P.சந்திரன் | 0.07 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.28 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | பல்லவன் நகர் 2வது பிரதான சாலை 2வது அவென்யூ பகுதிக்கு மழைநீர் வடிகால்வாய், மூடுபலகைகள் மற்றும் பேவர் வசதிகள் மேற்கொள்ளுதல். | 4.00 | G.இராமமூர்த்தி<br><br>M/s.குமரேசன் காண்ட்ராக்டர் | 0.06 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.33 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | கற்பகாம்பாள் நகர் பூங்கா அருகில் மற்றும் மகாலட்சுமி நகர் பகுதிக்கு 8 மீ உயரமுள்ள மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்துதல். | 7.00 | M/s.சன்வியூ எண்டர்பிரைசஸ்<br>M/s.மகாலட்சுமி எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டு விலை<br><br>6.36 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7. | ஐயப்பமடம் சாலை குறுக்கு தெரு மற்றும் யாதவர் தெருவிற்கு தார்தளம் அமைத்தல். | 10.00 | KS.ஜனார்த்தனம்<br><br>P.ரகு | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.34 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | பாலாஜி கோவிந்த நகர் பிரதான சாலைக்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 8.00 | M/s.VV சிவில் ஒர்க்ஸ்<br><br>**M/s.**ராமலட்சுமி எண்டர்பிரைசஸ் | 0.01 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.21 % மதிப்பீட்டை விட குறைவு |
| 9. | பாலாஜி கோவிந்த நகர் 1வது மற்றும் 2வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 6.50 | M/s.RR பில்டர்ஸ்<br><br>M/s.வனஜா கன்ஸ்ட்ரக்ஸன் | 2.87 % மதிப்பீட்டை விட குறைவு<br>2.00 % மதிப்பீட்டை விட குறைவு |
| 10. | மேல்அயனம்பாக்கம் பெருமாள் கோயில் தெருவில் பழுதடைந்த கேபிள்கள் புதியதாக மாற்றியமைத்தல். | 2.20 | **M/s.**ராமலட்சுமி எண்டர்பிரைசஸ்<br><br>M/s.VV சிவில் ஒர்க்ஸ் | 0.26 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.52 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 11. | மேல்அயனம்பாக்கம் பெருமாள் கோயில் குறுக்கு தெருவில் பழுதடைந்த கேபிள்கள் புதியதாக மாற்றியமைத்தல். | 9.70 | **M/s.**ராமலட்சுமி எண்டர்பிரைசஸ்<br><br>M/s.VV சிவில் ஒர்க்ஸ் | 0.26 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.52 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் தேவதாஸ் தெரு மற்றும் நந்தகுமார் தெரு பகுதியில் 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.80 | M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ்<br><br>M/s. ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | 0.32 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.08 % மதிப்பீட்டை விட குறைவு |
| 13. | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் சின்னசாமி தெரு, அனுஷ்கா தெரு மற்றும் சிலக கணபதி தெரு பகுதியில் 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 7.40 | M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ்<br><br>M/s. ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | 0.32 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.08 % மதிப்பீட்டை விட குறைவு |
| 14. | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் சுப்பிரமணி தெரு, பெருமாள் தெரு, பாஸ்கரன் தெரு மற்றும் நித்தியானந்தம் தெரு பகுதியில் 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 9.80 | M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ்<br><br>M/s. ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | 0.32 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.08 % மதிப்பீட்டை விட குறைவு |
| 15. | வி.ஜி.என் மகாலட்சுமி நகர் 2வது பிரதான சாலை மற்றும் 4வது பிரதான சாலைக்கு 7மீ உயர்முள்ள Octogonal Pole மின்கம்பங்கள் அமைத்து 90 W LED தெருமின் விளக்குகள் பொருத்துதல். | 8.00 | M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ்<br><br>M/s. ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ் | 0.30 % மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.08 % மதிப்பீட்டை விட குறைவு |
| 16. | இந்நகராட்சி அலுவலக கட்டடத்தில் ஆதார் மையம் மற்றும் இ–சேவை மையம் அமைத்தல். | 4.00 | J.இளங்கோ<br><br>J.வெங்கடேசன் | 0.23 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.58 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 17. | நூம்பல் அகதீஸ்வரன் கோயில் அருகில் உள்ள சமுதாய கழிப்பறை கட்டிடத்தில் பழுது பார்த்து மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.50 | V.அசோகன்<br><br>P.பாண்டுரங்கன் | 0.04 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.74 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 18. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பசுமை உரக்குடில்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்தல். | 4.50 | M/s.வனஜா கன்ஸ்ட்ரக்ஸன்<br><br>M/s.RR பில்டர்ஸ் | 0.39 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.42 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 19. | செட்டி தெரு, திருவள்ளூவர் தெரு, தினேஷ் நகர், மாசிலாமணி நகர், செந்தில் நகர், ஸ்ரீராம் தெரு மற்றும் நியூ சென்சூரியன் நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் குழாய் அமைத்தல். | 3.00 | G.விஜயகுமார்<br><br>M/s.வனஜா கன்ஸ்ட்ரக்ஸன் | 0.36 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.37 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 20. | அம்பத்தூர் வானகரம் பிரதான சாலையில் (கீழ்அயனம்பாக்கம் பகுதி) மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 6.50 | K.அருண்குமார்<br><br>V.பார்த்திபன் | 0.71 % மதிப்பீட்டை விட குறைவு<br>1.53 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 21. | அம்பத்தூர் வானகரம் பிரதான சாலையில் (கீசன் நகர் எதிரில்) மழைநீர் வடிகால்வாய் மற்றும் மூடுபலகைகள் அமைத்தல். | 8.70 | K.அருண்குமார்<br><br>V.பார்த்திபன் | 0.71 % மதிப்பீட்டை விட குறைவு<br>0.70 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

அ) மேற்படி பணிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1159 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ & ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.16

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கொரோனா வைரஸ் பரவி வருவதால், மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.06.2020 முதல் 30.06.2020 வரை 144 ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், பொது மக்களின் நோய் தொற்று நலன்கருதி தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து முக்கிய பிரதான சாலைகள், நகர்புறங்களில் உள்ள தெருக்கள், சாலை சந்திப்புகளை சவுக்கு மரம் மற்றும் அலுமினியம் தகடுகளை கொண்டு தடுப்பு (Barricade) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.16 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **M/s.ராமலட்சுமி எண்டர்பிரைசஸ்**, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1160 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.17

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கொரோனா வைரஸ் பரவி வருவதால், மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.06.2020 முதல் 30.06.2020 வரை 144 ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், பொது மக்களின் நோய் தொற்று நலன்கருதி தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து முக்கிய பிரதான சாலைகள், நகர்புறங்களில் உள்ள தெருக்கள், சாலை சந்திப்புகளை சவுக்கு மரம் மற்றும் அலுமினியம் தகடுகளை கொண்டு தடுப்பு (Barricade) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.29 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **திரு.G.மதிவேலன்**, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1161** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க கிருமி நாசினி தெளிப்பானுக்கு தேவையான மின்மோட்டாருடன் இணைக்க ஜனரேட்டர் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.16 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **M/s.குமரேசன் கான்ட்ராக்டர்**, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1162** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.19**

இந்நகராட்சி எல்லைகுட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–21ன் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க கிருமி நாசினி தெளிப்பானுக்கு தேவையான மின்மோட்டாருடன் இணைக்க ஜனரேட்டர் வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்ள அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.14 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **M/s.குமரேசன் கான்ட்ராக்டர்**, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1163** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.20**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுநிதி 2020–21–ன் கீழ் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக முக்கிய பிரதான சாலைகளிலும், சாலை சந்திப்புகளிலும் மற்றும் தெரு பகுதிகளிலும் கொரோனா தடுப்பு எச்சரிக்கைக்காக காவல் துறையினர், பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் ஆய்வு மேற்கொள்ள வசதியாக சாமியான பந்தல்கள், இருக்கை வசதிகள், குடிநீர்

வசதி மற்றும் தற்காலிக கழிப்பறை வசதிகள் அமைத்துக்கொள்ளவும், அதற்கான தோராய மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

**அ)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ஆ)** தற்போது கொரோன (COVID-19) வைரஸ் தொற்று நோய் காரணமாக தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள, மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.51 % குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் **திரு.G.மதிவேலன்**, அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**இ)** மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1164** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ & இ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.21

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையின் போது வெள்ள பாதிப்பு ஏற்படா வண்ணம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்காக வெள்ள நிவாரண நிதியினை எதிர்நோக்கி, பொதுநிதியின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில். |
|---|---|---|
| 1. | நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரிரை JCB இயந்திரத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்தி பணி செய்தல் மற்றும் தேவையான மணல் மூட்டைகள் தயார் செய்தல் மற்றும் சவுக்கு கொம்புகள் சப்ளை செய்தல். | 5.00 |
| 2. | நகராட்சி பகுதிகளில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வெளியேற்ற தேவையான நீர் மூழ்கி மின்மோட்டார்கள், வெளியேற்று குழாய்கள், PVC பைப்புகள் மற்றும் கேபிள் சப்ளை செய்தல். | 7.00 |
| 3. | நகராட்சி சொந்தமான மோட்டார்களை பயன்படுத்தி மழைநீர் வெளியேற்ற தேவையான ஆட்களை சப்ளை செய்தல். | 5.00 |
| 4. | நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரினை வாடகை அடிப்படையில் அதிக திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் பொருத்தி மழைநீரினை வெளியேற்றுதல். | 4.50 |
| 5. | நகராட்சி பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் வடிகால்வாயில் படிந்துள்ள மண் துகழ்களை தூர்வாரி சுத்தம் (desilting) செய்தல். | 6.00 |
| 6. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பருவ மழையில் சேதமடைந்துள்ள சாலைகளை செப்பணிடுதல். | 9.90 |
| | **மொத்தம்** | **37.40** |

**அலுவலக குறிப்பு :–**

அ. மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ. மேற்கண்ட பருவ மழை பணியின் அவசர அவசியத்தினை கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று வெள்ள நிவாரண நிதியினை எதிர்நோக்கி, பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும், ஒதுக்கீடு தொகை பெற்றவுடம் நிதியினை ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1165** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.22</u>**

திருவேற்காடு நகராட்சி 89164 மக்கள் தொகை 18 வார்டுகளை உள்ளடக்கிய 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுகொண்ட தேர்வு நிலை நகராட்சியாகும். மேலும், இந்நகராட்சியில் பொது சுகாதார பணிகளின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளை கவனிக்க தூய்மை பணியாளர்களின் பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனை மேற்கொண்டு அரசு வரையறையின்படி போதுமான தூய்மை பணியாளர்கள் இந்நகராட்சியில் இல்லாததால், நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டது. இதன்படி நகராட்சி நிர்வாக ஆணையரின் அவர்களின் K.Dis.2477/பி3/2012 நாள். 01.03.2017 –ன்படி இந்நகராட்சிக்கு உட்பட்ட 18 வார்டுகளிலும் தூய்மை பணியினை தனியார் மூலம் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்களை அமர்த்திக்கொள்ள பணிமேற்கொள்ளுமாறு அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்படும் தினக்கூலி ஊதிய விகித அடிப்படையில் தூய்மை பணிகளை 192 பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் **M/S Srinivas Waste Management Service Private Limited** நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.134 நாள். 31.05.2017–ல் ஏற்று அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, துப்புரவு பணி மேற்கொள்ள நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.441/– வீதம் 192 துப்புரவு பணியாளர்களை கொண்டு இந்நகராட்சியில் தூய்மை பணியினை ஓராண்டு காலத்திற்கு (15.07.2017 முதல் 14.07.2018 வரை) மேற்கொள்ள மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி **M/S Srinivas Waste Management Service Private Limited** நிறுவனம் சிறந்த முறையில் தூய்மை பணிகளை மேற்கொண்டமையால் ஒப்பந்த நிபந்தனைகளின்படி மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட அக்காலத்திற்கான ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.479/– என்ற உரிய அடிப்படையில் துாய்மை பணியாளர்களை ஊதியம் வழங்கிடவும் இவ்வலுவலக ந.க.எண். 1136/2015/எச்1 எண்ணிக்கை 13.07.2018 ஆம் தேதிய உத்திரவின்படி மேலும், இரண்டு ஆண்டிற்கு பணி நீட்டிப்பு செய்து (15.07.2018 முதல் 14.07.2020 வரை) உத்திரவு வழங்கப்பட்டு மேற்படி நிறுவனத்தினால் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் எதிர்வரும் 14.07.2020–ல் மேற்படி M/S Srinivas Waste Management Service Private Limited நிறுவனத்தின் தூய்மை பணியாளர்கள் சப்ளை செய்யும் ஒப்பந்த காலம் முடிவடைகிறது.

மேலும், தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று தமிழகம் முழுவதும் பரவி பாதிப்பு உள்ளாகி உள்ளதால் மத்திய /மாநில அரசினால் நோய் தொற்றினை கட்டுப்படுத்திட பொதுமக்கள் பாதிக்காத வண்ணம் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், திருவேற்காடு நகரில் கொரோனா நோய் தொற்று அதிகமாக பரவி வரும் நிலையில் தற்போதுள்ள தனியார் தூய்மை பணியாளர்கள் கடந்த மார்ச் –2020 முதல் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திட ஒவ்வொரு தூய்மை பணியாளர்களுக்கும் பகுதிகள் ஒதுக்கப்பட்டு தூய்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், நோய் தொற்று ஏற்பட்டு மரணம் அடையும் பொதுமக்களை எவ்வித முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும். அப்பணியினை பணி தேர்ச்சி மற்றும் அனுபவம் பெற்ற தற்போதுள்ள தனியார் தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மேலும், இவ்வாறான களப்பணியில் அனுபவம் வாய்ந்த பணியாளர்களை கொண்டுதான் இந்நகராட்சியில் கொரோனா நோயினை கட்டுப்படுத்தும் களப்பணிகளை மேற்கொள்ள முடியும் அப்பணியினை கருத்தில் கொண்டும் இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் 10.06.2020 ஆம் தேதிய குறிப்புரையில் தெரிவித்துள்ளபடியும் இந்நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்துவது அவசியம் என்பதாலும் மத்திய/ மாநில அரசினால் 144 தடை உத்திரவு தற்போது பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தூய்மை பணியாளர்கள் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ள வழிவகை இல்லாத நிலையில் பணிச்சுணக்கம் ஏற்பாடமல் இருக்க தற்போது உள்ளவாறு 192 தூய்மை பணியாளர்கள் கொண்டு தூய்மை பணிகளை மேற்கொண்டு வரும் **M/S Srinivas Waste Management Service Private Limited** நிறுவனத்தின் ஒப்பந்த காலம்

எதிர்வரும் 14.07.2020–ல் முடிவடையும் நிலையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதிய விகித அடிப்படையிலும் ஒப்பந்த விதிகளின்படி தற்போதுள்ள நிபந்தனைகளின்படி ஒப்பந்த காலத்தினை மீண்டும் 15.07.2020 முதல் 14.07.2021 அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் நாள் வரையில் **M/S Srinivas Waste Management Service Private Limited** நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தினை நீட்டிப்பு செய்து வழங்கிடவும், இதற்கென செலவீனத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1166** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.23

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (Covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநர், செங்கற்பட்டு மண்டலம், அவர்களின் ஆய்வு கூட்ட அறிவிப்பின்படி தினசரி கொரோனா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட குடியிருப்புகள் மற்றும் அப்பகுதியை சுற்றிலும் உள்ள பொது மக்களின் விவரங்கள் குறித்த கணக்கெடுப்பு பணிமேற்கொண்டு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தியதற்கிணங்க இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் 10.05.2020 ஆம் தேதிய குறிப்பின்படியும் தற்போது அரசினால் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும், உள்ளூர் மற்றும் வெளியூர், அங்கீகரிக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் ஏற்கெனவே, 12.05.2020 தேதிய விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய காமாட்சிபுரம் பகுதி அளவிலான மகளிர் குழு கூட்டமைப்பு மூலம் 40 நபர்களை கொண்டு கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது மேலும், கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 15.06.2020 தேதிய குறிப்பின்படி 50 நபர்களை கொண்டு கொரோனா வைரஸ் பாதித்தபகுதிகளில் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, பணியின் அவசர அவசியம் கருதி சளி, இருமல், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளதா என கண்டறிய ஏற்கெனவே பணி உத்திரவு வழுங்கப்பட்டு பணி மேற்கொண்ட காமாட்சிபுரம் பகுதி அளவிலான குழு கூட்டமைப்பு நிறுவனத்திடமே மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஊதிய விகிதத்தின்படியும் ஏற்கெனவே வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படியும் 50 பணியாளர்கள் சப்ளை செய்து கணக்கெடுப்பு பணி மேற்கொண்டமைக்கும் இதற்கென செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**ந.க. எண்.1136/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

அ) அவசர அவசியத்தினை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1167** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.24

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ்

**(Covid-19)** என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்தவும் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள **ACS** மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 150 படுக்கை வசதியுடன் கொரோனா வைரஸ் தொற்று நோய் சிகிச்சை வார்டுகள் அமைத்து சிகிச்சை மேற்கொள்ள தமிழக அரசு மற்றும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாக உத்திரவின்படி **ACS** மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை வார்டுகளில் சுகாதார பணிகள் கண்காணிக்கப்பட்டு வர தினசரி கொரோனா வார்டுகளில் கிருமி நாசினியை தெளிக்கவும், தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திய உணவுப் பொருட்கள் மற்றும் துணிமணிகள் பாதுக்காப்பான முறையில் கையாளவும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மவாட்டம் அவர்களின் அறிவுரைகளின்படி **ACS** மருத்துவமனையில் கொரோனா வைரஸ் சிகிச்சை வார்டுகளில் பணியாளர்களை நியமித்து கொரோனா வைரஸ் தடுப்பு பணியினை மேற்கொள்வதற்கு மேற்படி ACS மருத்துவமனைக்கு காலை மற்றும் மாலை என இருவேளைகளில் கிருமி நாசினி தெளிக்கவும், சுகாதாரப் பணிகள் மேம்படுத்திடவும் மற்றும் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்திய துணிமணிகள், உணவுப் பொருட்கள் அகற்றிட பாதுக்காப்பான முறையில் கையாளவும் நன்கு அனுபவம் உள்ள மற்றும் தன்னார்வத்தோடு பணிபுரிய வேண்டிய நிலையில் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ள தற்போது மத்திய, மாநில அரசுகள் 144 தடை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லை. மேலும், நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் அதிகமாக பரவி வருவதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **ACS** மருத்துவமனையின் பணிகள் மேற்கொள்ள ஏற்கெனவே 40 பணியாளர்கள் சப்ளை செய்து வரும் ஒப்பந்ததாரரான **திரு.G.மதிவேலன்** என்பவரிடமிருந்து மருத்துவமனையில் பணிபுரியவும் மேலும், காலை மற்றும் மாலை (Shift) முறையில் பணியாளர்கள் சப்ளை செய்ய பணி உத்திரவு வழங்கவும் மற்றும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1168** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.25

இந்நகராட்சி சொந்தமான பொது சுகாதார பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் TATA ACE வாகனங்களுக்கு வருடாந்திர காப்பீட்டுக் கட்டணம் 28.06.2020 உடன் முடிவடைவதால் அடுத்த ஒரு வருட காலத்திற்கு 29.06.2020 முதல் 28.06.2021 வரை வாகன காப்பீடு கட்டணம் பின்வரும் வாகனங்களுக்கு The New India Assurance Company Limited நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **ந.க.எண். 1946/2020/எச்1**

**வாகனங்களின் விவரம்.**

| வ. எண் | வாகனம் எண் | தேதி | தொகை |
|---|---|---|---|
| 1. | TN 12 AF1969 (Tata Ace ) | 28.6.2020 | ரூ. 23,886/- |
| 2. | TN 12 AF1986 (Tata Ace ) | 28.6.2020 | ரூ. 23,886/- |
| **நிகரத்தொகை** | | | **ரூ. 47,772/-** |

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1169** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.26

இந்நகராட்சி பகுதியில் கொரோன வைரஸ் நோய் தொற்று அதிகமாகி வருவதால். பொது மக்களிடைய கொரோனா வைரஸ் நோய் தொற்றின் பரவலை தடுக்க அரசின்

வழிகாட்டுதலின்படி அவசியமான நேரங்களில் வெளியில் செல்லும் போது கட்டாயம் முககவசம் அணிதல், சமூக இடைவெளியை பின்பற்றுதல் காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் ஆகிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி, நிவாரணப் பெறுதல், போன்ற நோய் தொற்றின் தடுப்பு வாசகங்கள் நகராட்சி பகுதி பொது மக்களிடம் விளம்பரம் செய்ய ஆறு ஆட்டோவில் ஒலிபெருக்கி (புனல் குழாய்) அமைத்து, நாள் வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்வதற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளதால் வழிவகையில்லை. மேலும் தற்போது நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதாலும், பணியின் அவசரம் அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் அவர்களால் அனுமதியளிக்கப்பட்டதை தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொண்டமைக்கும் மற்றும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1170** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.27

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் 9 இலகுரக வாகனங்களும், 33 பேட்டரியால் இயங்க கூடிய வாகனங்களும் (BOV) வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேலும் பொது சுகாதார பணியில் பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனம் (TATA ACE ) TN-12 AB -7456 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் Diesal Hose, Self Motor Service, Hydraulic Hose & Engine Oil Service மற்றும் இதர பழுதுகள் சரி செய்து தருவதற்கு தற்போது மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிக அளவில் பரவி வருவதால், களப்பணி நோயாளிகள் மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்து தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி பணிகள் மேற்கொள்ளவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1171** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.28

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிகள் செயல்படுத்தப்படுகிறது. மேலும், பொது சுகாதார பணியில் பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனம் (TATA ACE ) TN-12 AB -7456 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் Diesal Hose, Self Motor Service, Hydraulic Hose & Engine Oil Service மற்றும் இதர பழுதுகள் சரி செய்து தர வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் அனுமதிக்கு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | Machine Shop | Labour | Spares and Materials |
|---|---|---|---|---|
| 1 | A.R.V Body Works<br>No.97, Tank Street Poonamallee, Chennai-56. | 7,200/– | 16,900/– | 28,450/– |
| 2 | Maha Sakthi Body Works<br>No.281, Srinivasan Nagar, Trunk Road, Ponamallee , Chennai-56. | 7,500/– | 17,000/– | 29,100/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | Siva Sakthi Body Works<br>No.9, Erikarai Street, Pidarithangal ,<br>Ponamallee, Chennai-56. | 8,850/– | 11,300/– | 26,610/– |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான சிவசக்தி பாடி ஒர்க்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், மற்றும் பணி உத்திரவு வழங்கவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1172** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.29</u>

திருவேற்காடு நகராட்சியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தினசரி அதிகமாகி வருவதாலும் பொதுமக்களுக்கு அடிக்கடி கைகள் கழுவும் சோப்பு கரைசல் (Handwash) 200ml, போதிய அளவு இருப்பு இல்லாததால் 300 பாட்டில்கள் வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளரால் கேட்டுக்கொண்டுள்ள படி Handwash கொள்முதல் செய்திட 144 தடை ஆணை மத்திய மாநில அரசு அணையில் பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழி வகை இல்லை. மேலும் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்து வருவதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கரதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கென ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/– பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1173** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.30</u>

திருவேற்காடு நகராட்சி கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும், நகராட்சி பகுதியில் தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிகரித்து வருவதால் அப்பகுதியில் கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளவர்கள் கணக்கெடுப்பு பணி நடைப்பெற்று வரப்படுகிறது. இக்கணகெடுப்பின்போது பணியாளர்களிடம் **"Finger Tip Pulse Oximeter"** 50 எண்ணிக்கையிலும் "**Infrared Thermometer**" 15 எண்ணிக்கையில் வாங்கி வழங்கினால் கணக்கெடுப்பின்போது வைரஸ் நோயின் அறிகுறிகள் உள்ளதா என்பதை கண்டறிந்து உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிக்கவும், மற்றும் நோய் தொற்று உள்ள நபரை தனிமைப்படுத்தி கண்காணித்திடவும், இயலும் எனவே, மேற்படி கருவிகள் வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வாளரால் 05.06.2020. தேதிய குறிப்பின்படி கோரியுள்ளார். மேலும், தற்போது 144 தடை உத்திரவு மத்திய மாநில அரசுகளால் பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததால், தற்போது நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவி வருவதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் பணிகள் மேற்கொள்ளவும் உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும், இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1174** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.31

2020 –2021–ம் ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, பாதுகாப்பாக கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கோணிப்பைகள் நாள் ஒன்றுக்கு 1000 தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில் தெரிவித்துள்ளார் மேலும் தற்போது நகராட்சியில் கோணிப்பைகள் சப்ளை செய்யும் நிறுவனமான J.J எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பணிக்காலம் 30.06.2020 உடன் முடிவடைவதாலும், தற்போது கொரானா வைரஸ் தொற்றுநோய் பரவும் காலமாக உள்ளதாலும் மற்றும் மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததாலும், பொது சுகாதார பணிகள் அவசியத்தினை கருதி, பொது சுகாதாரப் பணியில் தொய்வு ஏற்படாமல் இருக்கவும் போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் ஏற்கெனவே சப்ளை செய்யும் நிறுவனமான J.J **எண்டர்பிரைசஸ்** நிறுவனத்திடமே ஏற்கெனவே ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டத்தின் அடிப்படையில் அதே விலைவிகிதப்படி போரா பிளாஸ்டிக் கோணிப்பைகள் விநியோகம் செய்ய ஜுலை–2020 முதல் செப்டம்பர்–2020 முடிய 3 மாத காலத்திற்கு அதேவிலை விகிதப்படி சப்ளை செய்யவும் அதற்கான பணி உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1175** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.32

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் பேருந்து நிலையம், சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் விழிப்புணர்வு ஏற்படும் வகையில், (covid 19) என்ற தொற்று நோய் பரவாமல் தடுக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் மற்றும் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் அவர்களின் அறிவுரையின்படியும் கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தெருக்களிலும் இரண்டு பக்கங்களில் வாகனம் மூலம் மின் மோட்டார் பொருத்தி தினசரி கிருமி நாசினி தெளித்து கொரோனா வைரஸ் நோயினை கட்டுப்படுத்த, லைசால் என்னும் கிருமி நாசினி தற்போது போதிய அளவு இருப்பு இல்லாததாலும் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி ஏற்கெனவே நகர்மன்ற தீர்மான எண்.1060, நாள்.31.03.2020–ன்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **Sri Balaji Marketing** நிறுவனத்திடம் அதே விலைவிகிதத்தின்படி **லைசால்** என்னும் கிருமி நாசினி 2500 லிட்டர் கொள்முதல் செய்தமைக்கும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது. **ந.க. எண்.1961/2020/எச்1.**

**அலுவலக குறிப்பு:–**

திருவேற்காடு நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1176** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.33

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், மற்றும் பேருந்து நிலையம் சமுதாய கூடங்கள், வணிக வளாகங்கள் மற்றும் பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி **சோப்பு கரைசல் (Hand Sanitation)** என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங்** நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று இந்நகர்மன்றம் தீர்மான எண்.1092, நாள்.30.04.2020. ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது இதனை தொடர்ந்து அதே விலைவிகிதத்தின்படி தற்போது **ஸ்ரீ பாலாஜி மார்கெட்டிங்** நிறுவனத்திடமே கூடுதலாக தற்போது **சோப்பு கரைசல் 100 லிட்டர் (HAND WASHER)** வாங்க பணிகள் மேற்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1177** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.34

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரகுடில்களில் சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி பசுமை உரக்குடில்களில் மக்கும் மற்றும் மக்காத என தரம் பிரித்து மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை அரக்கோணம், நாவலூர் மற்றும் ரெட்ஹில்ஸ் ஆகிய பகுதிகளுக்கு தனியார் நிறுவனங்களில் திரவப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் நகராட்சி பகுதியிலிருந்து நாவலூர் தனியார் நிறுவனங்களுக்கு குப்பைகள் எடுத்து செல்வதற்கு 144 தடை உத்திரவு அமுலில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லை எனவே ஏற்கனவே நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் **திரு.என்.செல்வராஜ்** என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் முறையே எண்.1015 நாள்.28.02.2020. அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மேலும், நகர்மன்ற தீர்மான எண்.1056 நாள் 31.03.2020 –ன் நகர்மன்ற தீர்மான எண்.1081 நாள் 28.04.2020 தற்போது துப்புரவு ஆய்வாளரின் 15.06.2020 ஆம் தேதிய குறிப்பின்படி ஏற்கெனவே மேற்படி பணிக்கான விலைவிகித அடிப்படையிலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி பணிகள் மேற்கொள்ள ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி பகுதியில் கோலடி பகுதியில் உள்ள மறுசுழற்சி செய்ய இயலாத மக்காத கழிவுகளை அகற்றிட பணி மேற்கொள்வதற்கும் மற்றும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.9.90 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2283/2019)

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1178** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.35</u>

இந்நகராட்சியில் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவுவதை தடுக்கவும் அரசு விதிகளை மீறி செயல்படும் இறைச்சி கடைகள் மற்றும் மளிகை கடைகள் பிற இதர கடைகள் திறக்கும் நேரம் மற்றும் கடை அடைக்கும் நேரம் கண்காணித்திடவும் கடைகளில் சமூக இடைவெளி பின்பற்றப்படுகிறதா என கண்காணித்திடவும் தவறும் பட்சத்தில் உடனுக்குடன் அபாரதம் விதிக்கவும் நகராட்சி பகுதிகளில் நகராட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சி தலைவர் உத்திரவிடப்பட்ட அலுவலர்களின் பறக்கும் படை அமைக்கப்பட்டு கொரோனா வைரஸ் தடுப்பு அலுவலர்கள் பயன்படுத்திடும் வகையில் வாகனங்கள் தினசரி வாடகை அடிப்படையில் இரண்டு வாகனங்கள் சப்ளை செய்ய புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அமுலில் உள்ளதால் வழிவகை இல்லை மேலும், நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகளவில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களால் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கென ஆகும் செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1179** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.36</u>

இந்நகராட்சியில் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாக பரவுவதை தடுக்கவும் அரசு விதிகளை மீறி செயல்படும் இறைச்சி கடைகள் மற்றும் மளிகை கடைகள் பிற இதர கடைகள் திறக்கும் நேரம் மற்றும் கடை அடைக்கும் நேரம் கண்காணித்திடவும் கடைகளில் சமூக இடைவெளி பின்பற்றப்படுகிறதா என கண்காணித்திடவும் தவறும் பட்சத்தில் உடனுக்குடன் அபாரதம் விதிக்கவும் நகராட்சி பகுதி பறக்கும் படை அமைக்கப்பட்டு கொரோனா வைரஸ் தடுப்பு அலுவலர்கள் பயன்படுத்திடும் வகையில் வாகனங்கள் ஒப்பந்த முறையில் தினசரி வாடகை அடிப்படையில் இரண்டு வாகனங்கள் சப்ளை செய்ய வரபெற்ற மூன்று விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் அனுமதிக்கும்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | வாகனம் ஒன்றுக்கு | தொகை |
|---|---|---|---|
| 1 | S.V. டிராவல்ஸ்,<br>எண்.27, இராமகிருஷ்ணா நகர்,<br>கண்ணப்பாளையம்,<br>கோவில் பதாகை, சென்னை-62. | நாள் ஒன்றுக்கு<br>இனோவா வாகனம்<br>ஒன்றுக்கு அனைத்து<br>செலவுகள் உள்பட | ரூ.3775/- |
| 2 | J.B. டிராவல்ஸ்,<br>பிளாட் எண்.63, ஸ்ரீராம் நகர்,<br>பருத்திப்பட்டு, சென்னை-71. | நாள் ஒன்றுக்கு<br>இனோவா வாகனம்<br>ஒன்றுக்கு அனைத்து<br>செலவுகள் உள்பட | ரூ.3700/- |
| 3 | ராமலட்சுமி எண்டர்பிரைசஸ்<br>எண்.1/4, வெங்கடேஸ்வரா தெரு,<br>காமராஜபுரம், பட்டாபிராம்,<br>சென்னை-72. | நாள் ஒன்றுக்கு<br>இனோவா வாகனம்<br>ஒன்றுக்கு அனைத்து<br>செலவுகள் உள்பட | ரூ.3500/- |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **ராமலட்சுமி** எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பணி உத்திரவு வழங்கவும் ஆணையர் அவர்களின் அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1180** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.37</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் தினசரி பொது சுகாதாரம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் கொரோனா வைரஸ் நோயின் தாக்கம் அதிகமாக பரவி வருவதால் நோய் தொற்று பாதித்த நபர்களின் வீடுகள் மற்றும் தெருக்கள் தோறும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும், **Containment Zone** அமைந்துள்ள பகுதிகளில் தினசரி 4 முறை கிருமி நாசினி தெளிக்கவும், கொரோனா வைரஸ் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளில் தினசரி 4 முறை தெளிக்க வேண்டியது அவசியமாகிறது என துப்புரவு ஆய்வாளரால் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது **லைசால்** என்னும் கிருமி நாசினி போதிய அளவு இருப்பு இல்லாததாலும், மேலும் மத்திய மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு அமுலில் உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரிட வழிவகை இல்லாததாலும், நகராட்சி பகுதியில் தினசரி கொரோனா வைரஸ் தாக்கம் அதிகமாகி பரவுதாலும், ஏற்கெனவே இந்நகராட்சியில் 18.03.2020 விலைப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்த நிறுவனம் **Sri Balaji Marketing** நிறுவனத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் முறையே 1060, நாள்.31.03.2020–ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தின்படியே தற்போது மேலும், லைசால் என்னும் கிருமி நாசினி 2500 லிட்டர் கொள்முதல் செய்ய மேற்படி **Sri Balaji Marketing** நிறுவனத்தினால் வழங்கியுள்ள விலை விதிதத்தின்படி லைசால் கொள்முதல் செய்திடவும் இதற்கென செலவீனத்திற்கு வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **<u>ந.க. எண்.1961/2020/எச்1.</u>**

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1181** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.38</u>**

இந்நகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவுவதை தடுக்க **Fingertip Pulse Oximeter** மற்றும் **Infrared Thermometer** கொள்முதல் செய்திட விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S. No | Supply of Materials | Phoenix global ventures | United trading co | Hi tech green india |
|---|---|---|---|---|
| 1 | Fingertip Pulse Oximeter 1 NO | 1500.00+Gst | 1700.00+Gst | 1900.00+Gst |
| 2 | Infrared Thermometer 1 NO | 2500.00+Gst | 2700.00+Gst | 2900.00+Gst |

மேற்படி பட்டியலின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய நிறுவனமான **PHOENIX GLOBAL VENTURES** நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம் .

**நகர்மன்ற தீர்மான எண்.1182** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.39</u>**

திருவேற்காடு நகராட்சியில் பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் (Covid 19) தொற்றுநோய் பரவாமல் தடுக்க நகராட்சி பகுதி முழுவதும் **லைசால்** என்னும் கிருமி நாசினி இருபக்கமும் தெளிக்க நகராட்சி நிர்வாக ஆணையர், மற்றும் கொரோனா வைரஸ் தடுப்பு கண்காணிப்பு அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர், மற்றும் துணை இயக்குனர், பொது சுகாதாரம் திருவள்ளூர், ஆகியோரின் அறிவுரைகளின்படி சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளவும் , நகராட்சியில் போதிய அளவு

**லைசால்** இருப்பு வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டதால் 2000 லிட்டர் கொள்முதல் செய்திட தற்போது, மத்திய, மாநில அரசுகளின் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர காலதாமதமாகும் என்பதாலும், கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவும் காலமாக உள்ளதாலும், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியத்தை கருதியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகராட்சி ஆணையர் அவர்கள் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, **லைசால்** கிருமி நாசினி **2,000 லிட்டர்** கொள்முதல் செய்யவும், இதற்கென ஆகும் தோராய செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1961/2020/எச்1)

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்.1183** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.40

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் கொரோனா வைரஸ் **(Covid 19)** தொற்றுநோய் பரவாமல் தடுக்க பொது மக்களிடையே கொரோனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்த நகராட்சிகள் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் அறிவுரைகளின்படி தூய்மை பணியாளர்கள் பாதுகாப்புடன் பணியாற்றிடவும், கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் பாதுகாப்புடன் தூய்மை பணி ஆற்றிடவும் **முழு அளவு பாதுகாப்பு கவச உடை (PPE)** இருப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, நகராட்சி பகுதியில் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்று நோய் அதிகமாகி வருவதால் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) போதிய அளவு நகராட்சியில் இருப்பு இல்லாததாலும், 1000 எண்ணிக்கையில் முழு அளவிலான பாதுகாப்பு கவச உடை (PPE) பணியின் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும், மேலும் கொரோனா வைரஸ் – தொற்று நோய் வேகமாக பரவும் காலமாக உள்ளதாலும் தற்போது மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நடைமுறையில் உள்ளதால், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும், நகராட்சி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெளியூர், தனியார் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும், மேலும், இதற்கென செலவீனம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1184** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.41

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89164 ஆகும் தற்போது குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 22.89 மெட்ரிக்டன் ஆகும். மேலும், குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத தன்மை என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர், இணை இயக்குனர் பொது சுகாதாரம் திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் ஆகியோரின் டெங்கு ஒழிப்பு

ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதி முழுவதும் டெங்கு நோய் ஒழிப்பு களப்பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் **Vidivelli Rural Development Trust** என்ற நிறுவனத்தின் மூலம் 35 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண். 1058 நாள். 31.03.2020. ன்படி 01.04.2020 முதல் 30.06.2020 வரை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வரப்படுகிறது. மேலும் தற்போது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் அவசியம் சார்ந்த பணி என்பதாலும், மேலும், தற்போது மழைக்காலம் ஆரம்பமாகி திடீர் திடீரென மழை பெய்வதால் டெங்கு நோய் பரவும் காலமாக உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழிவகை இல்லை என்பதால், பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி ஆணையர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, ஏற்கெனவே பணி மேற்கொண்ட **Vidivelli Rural Development Trust** நிறுவனத்திற்கு அதே ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு 25 (DBC) பணியாளர்கள் கூடுதலாக சப்ளை செய்ய ஏற்கெனவே அனுமதித்துள்ள நிபந்தனைக்களுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்கவும் இதற்கான செலவீனம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1185 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.42

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளை உள்ளடக்கிய சென்னை மாநகராட்சி ஒட்டி உள்ள நகராட்சியாகும், இங்கு 22,291 குடியிருப்புகள் அமைந்துள்ளன நகராட்சி பகுதிகளில் இரு வேலைகளிலும் கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வரப்படுகிறது. நகராட்சி பகுதிகளில் இரவு நேரங்களில் வாகனத்துடன் கூடிய **Mega Fogging Machine** இயந்திரம் உபயோகப் படுத்தப்பட்டு கொசுப்புகை மருந்து அடிக்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது மேற்குறிப்பிட்ட **Mega Fogging Machine** இயந்திரங்களில் பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி புகைப்போக்கி இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.20,000/– செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மேலும் அவசர அவசியம் கருதி 144 தடை உத்திரவு அமுலில் உள்ளதால், விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் இதற்கென ஆகும் செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1186 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.43

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89164 ஆகும் தற்போது குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 22.89 மெட்ரிக்டன் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத தன்மை என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேலும், மாவட்ட ஆட்சி தலைவர் திருவள்ளூர், இணை இயக்குனர் பொது சுகாதாரம் திருவள்ளூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் செங்கற்பட்டு மண்டலம் ஆகியோரின் டெங்கு ஒழிப்பு ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி நகராட்சி பகுதி முழுவதும் டெங்கு நோய் ஒழிப்பு களப்பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் **Vidivelli Rural Development Trust** என்ற நிறுவனத்தின் மூலம் 35 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண். 1058 நாள். 31.03.2020. ன்படி 01.04.2020 முதல் 30.06.2020 வரை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வரப்படுகிறது. மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம்

30.06.2020 உடன் முடிவடைவதாலும், மேலும் தற்போது கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் அவசியம் சார்ந்த பணி என்பதாலும், மேலும், தற்போது மழைக்கலாம் ஆரம்பமாகி திடீர் திடீரென மழை பெய்வதால் டெங்கு நோய் பரவும் காலமாக உள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர மத்திய மாநில அரசுகள் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழிவகை இல்லை என்பதால் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கெனவே பணி மேற்கொண்ட **Vidivelli Rural Development Trust** நிறுவனத்திற்கு அதே ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஜூலை 2020 ஆகஸ்ட் 2020 மற்றும் செப்டம்பர் 2020 ஆக மூன்று மாத காலத்திற்கு 35 (DBC) பணியாளர்கள் சப்ளை செய்யும் ஒப்பந்தத்தினை கால நீட்டிப்பு செய்யவும் ஏற்கெனவே அனுமதித்துள்ள நிபந்தனைக்களுக்குட்பட்டு பணி உத்திரவு வழங்கவும் இதற்கான செலவீனம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1187 நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**பொருள் எண்.44**

2019ம் வருட தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள், அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நிI) நாள்.04.02.2019, தமிழ்நாடு அரசிதழ் எண்.43, அறிவிக்கை நாள்.04.02.2019 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்.05.03.2019–ன்படி இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.745, நாள்.07.03.2019–ல் கட்டிடம் கட்டுவதற்கு, மனை உட்பிரிவு மற்றும் மனைப்பிரிவு ஆகியவற்றிற்கு அனுமதி வழங்குவதற்கு கட்டணங்களை உயர்த்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதில் சில இனங்கள் விடுப்பட்டுள்ளதால், அவற்றிக்கு கீழ்க்கண்டவாறு கட்டணங்களை நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | அளவு | கால அளவு | புதியதாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் (ரூ). |
|---|---|---|---|---|
| 1. | மாடிப்படி | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | 500.00 |
| 2. | மின் தூக்கி (Lift) | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | 1000.00 |
| 3. | மேல்நிலை நீர்தேக்க தொட்டி (OHT) | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | 500.00 |
| 4. | நச்சுத் தொட்டி கட்ட (Septic Tank) | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | 1000.00 |
| 5. | கட்டுமான பொருட்கள் கட்டிட இடிபாடு பொருட்கள் ஆகியவற்றை போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கு இடையூறு இன்றியும், மழைநீர் வடிகால்வாயை பாதிக்காத அளவிலும் சேகரித்து வைத்து மனுதாரார் சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள | 1 ச.மீ | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | 50.00 |
| 6. | நகர் வரைபடம் | ஒன்றுக்கு | – | 1000.00 |

| வ. எண் | விவரம் | அளவு | கால அளவு | புதியதாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் (ரூ). |
|---|---|---|---|---|
| 7. | இந்நகராட்சி எல்லையில் உள்ள பூங்கா, நகராட்சி இடங்கள் மற்றும் நகராட்சி பராமரிப்பில் உள்ள இடங்களில், சினிமா மற்றும் நாடகம் சம்மந்தமான படப்பிடிப்பு நடத்த (காவல் துறை அனுமதி கடிதம் சமர்பித்த பின்னர் தொகை வசூலிக்கப்படும்). | நாள் ஒன்றுக்கு | காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை | 25,000.00 |
| 8. | இந்நகராட்சி எல்லைக்குள் பொருட்காட்சி அல்லது சர்க்கஸ் நடத்துவதற்கு (சம்மந்தப்பட்ட துறையில் அனுமதி பெற்று, தடையில்லாத சான்று சமர்பிக்க வேண்டும்). | – | குறைந்தது ஒரு மாத காலம் | 50,000.00 |
| 9. | அனுமதி பெறாமல் கட்டிட வேலைகள் ஆரம்பித்த பிறகு அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கு (விதிகளின்படி கட்டிடம் கட்டப்பட்டு வரவேண்டும்) | – | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க (குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாதது) | கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% கூடுதலாக வசூல் செய்யப்படும். |
| 10. | குடியிருப்பு அல்லாத கட்டிடம் அனுமதி வழங்குவது | – | ஐந்து ஆண்டு காலம் அனுமதி வழங்க | தொழிற்சாலை கட்டிடம் கட்டுவதற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட தொகை வசூல் செய்யப்படும். |

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்

ஆ) 01.07.2020 முதல் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க மன்றம் முடிவு செய்யலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1188** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அ, ஆ அனுமதிக்கப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.45</u>

இந்நகராட்சி எல்லைக்குள் அயனம்பாக்கம் கிராமம் சர்வே எண்.441/2B–ல் 744 சதுரமீட்டர் சாலையை உறுப்பினார்–செயலர்,சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,சென்னை அவர்களின் கடிதம் எண்.L1/16495/2018 நாள்.01.11.2019 கடித்ததுடன் இணைக்கப்பட்டுள்ள சாலையமைப்பு வரைபடத்தின் படி மனுதாரர் M/s.V.R Builders பங்குதாரர்கள் திருமதி S.விஜராணி மற்றும் திரு.J.ராகுல் சங்கீர்த்தியான் தானப்பத்திரம் ஆவண எண்.4009/2020 நாள்.12.03.2020–ல் ஒப்படைத்துள்ளனர்.மேற்கண்ட தானப்பத்திரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. ( ந.க.எண்.7601/2019/F1)

**அலுவலக குறிப்பு :–**

மனுதாரரின் தானப்பத்திரத்திணை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1189** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## <u>பொருள் எண்.46</u>

இந்நகராட்சி எல்லைக்குள் அயனம்பாக்கம் கிராமம் சர்வே எண். 375/2 & 375/3–ல் நில உயோக மாற்றிதிற்காக 495.சதுர மீட்டர் சாலையை உறுப்பினர் செயலாளர்,சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் கடிதம் எண் R1/9380/2019, நாள்.21.12.2019 கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலையமைப்பு வரைப்படத்தின்படி மனுதாரர்கள் திருமதி.கொலேன் டேனியல் மற்றும் திரு.N.N.டேனியல் தானப்பத்திரம் ஆவணம் எண்.120/2020 நாள்.06.01.2020–ல் மற்றும் பிழைத்திருத்தல் பத்திரம் ஆவணம் எண்.2766/2020

நாள்.25.02.2020–ல் ஒப்படைத்துள்ளனர் மேற்கண்ட தானப்பத்திரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. (ந.க. எண்.8221/2019/F1)

**அலுவலக குறிப்பு :–**

மனுதாரரின் தானப்பத்திரங்களை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1190** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : பதியப்பட்டது.**

---

## பொருள் எண்.47

இந்நகராட்சிக்கு 2020–21ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், பேப்பர், கணினி படிவங்கள் மற்றும் இதர பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1191** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.48

இந்நகராட்சிக்கு 2020–21ம் ஆண்டிற்கு அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான பதிவேடுகள், படிவங்கள், இரசீதுகள் மற்றும் இதர பொருட்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1192** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.49

இந்நகராட்சிக்கு 2020–21ம் ஆண்டிற்கு அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான கணினி உபகரணங்களை மற்றும் உதிரி பாகங்களை அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் இதற்கான தோராய செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1193** **நாள்.30.06.2020**

**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.**

---

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**